### கச்சத்தீவை தாரைவார்த்தது தி.மு.க.– காங்கிரஸ் செய்த தேசத்துரோகம்

# குடும்ப அரசியலில் இருப்பவர்கள் போதைப்பொருட்களை ஊக்குவிக்கிறார்கள்

## நெல்லை பிரச்சார கூட்டத்தில் பிரதமர் மோடி தாக்கு

நெல்லை, ஏப்.16–

**தமிழ்நாடு தற்போது போதையை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. குடும்ப அரசியலில் இருப்பவர்கள், போதை பொருட்களை ஊக்குவித்து கொண்டு இருக்கிறார்கள் என்று பிரதமர் மோடி பேசினார்**

நெல்லை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அம்பாசமுத்திரம் அகஸ்தியர்பட்டியில் பாரதீய ஜனதா மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களான நயினார் நாகேந்திரன் (திருநெல்வேலி), பொன் ராதாகிருஷ்ணன் (கன்னியாகுமரி), ராதிகா சரத்குமார் (விருதுநகர்), ஜான்பாண்டியன் (தென்காசி), எஸ்டிஆர் விஜயசீலன் (தூத்துக்குடி), விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் பாஜக வேட்பாளர் நந்தினி ஆகியோரை ஆதரித்து நேற்று பிரதமர் நரேந்திர மோடி பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:– மாற்றத்தின் பூமியாக இங்கு பாரதீய ஜனதாவுக்கு ஏற்பட்ட எழுச்சியை பார்க்கும்போது தி.மு.க., காங்கிரஸ் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணிக்கு தூக்கம் தொலைந்து இருக்கும். தமிழக மக்கள் தமிழ் புத்தாண்டை உற்சாகமாக கொண்டாடிய அதே நாளில் தான் பாரதீய ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஏழை, எளியோருக்கு மேலும் 3 கோடி வீடுகள் வழங்கும் திட்டம், மீனவர்களுக்கு கடல்பாசி, கடல்முத்து உற்பத்திக்கான திட்டங்கள் உள்ளிட்டவை இந்த தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

நெல்லை–சென்னை வந்தே பாரத் ரெயில் கொண்டு வரப்பட்டு உள்ளது. அதன்மூலம் இந்த பகுதி வளர்ச்சி அடைந்து உள்ளது. இந்த வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தென் பகுதிக்கு புல்லட் ரெயில் திட்டத்தை உருவாக்க உள்ளோம். புதிய அரசு வந்ததும் அதற்கான பணிகள் தொடங்கும்.

தமிழ் கலாசாரத்தை போற்றும் பாரதீய ஜனதாவை அனைவரும் விரும்புகிறார்கள். தமிழ் மொழிக்கு உலக அங்கீகாரம் பெற்றுத்தர பாரதீய ஜனதா உறுதியேற்றுள்ளது.

இந்தியா கூட்டணியில் தி.மு.க., காங்கிரசின் சித்தாந்தம் என்னவென்றால் வெறுப்பு மற்றும் எதிர்ப்பு சித்தாந்தத்தில் உருவாக்கப்பட்டு உள்ளது. அவர்கள் தமிழர்களின் அடையாளம், கலாசாரம், பண்பாட்டை திராவிடம் என்ற பெயரால் அழிக்க நினைக்கிறார்கள்.

நாட்டின் மீது பற்று வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் பிடித்தமான கட்சி பாரதீய ஜனதாதான். எப்போதும் தமிழ் மொழி, மக்களை நேசிக்கும் கட்சி. தமிழ் மக்கள் மீது மாறாத அன்பு கொண்டுள்ள கட்சி. இந்தியா தன்னிறைவு பெற வேண்டும் என்று போராடிய வ.உ.சி.யை நினைத்து பார்க்கிறேன். அவர் எங்களுக்கு உத்வேகம் அளிக்கிறார். காமராஜர் என்ற மாபெரும் தலைவர் தேச பக்தியும், நேர்மையும் கொண்ட தலைவர். அவரை பின்பற்றியே பாரதீய ஜனதா கட்சி நேர்மையான, தூய்மையான வழியில் பயணித்து வருகிறது. தி.மு.க.வும், காங்கிரசும் காமராஜரை அவமதித்து வருகிறது. எங்களது லட்சியம் தூய்மையான அரசியல். தூய்மையான அரசியலே எம்.ஜி.ஆரின் லட்சியம். எம்.ஜி.ஆரின் கனவுகளை பா.ஜனதா முன்னெடுத்து செல்கிறது. எம்.ஜி.ஆரின் பாரம்பரியத்தை தி.மு.க. அவமதிக்கிறது. சகோதரி ஜெயலலிதாவை சட்டசபையில் தி.மு.க. அவமதித்ததை மறக்க முடியாது.

### தேச விரோத செயல்

தி.மு.க.–காங்கிரஸ் கூட்டணி எவ்வளவு தேச விரோத செயல்களை செய்துள்ளது என்பதை நினைத்து பார்க்க வேண்டும். இவர்கள் இருவரும் தமிழகத்தின் உயிர்நாடியான கச்சத்தீவை நம்மிடம் இருந்து துண்டித்து வேறு நாட்டிற்கு (இலங்கைக்கு) கொடுத்தனர்.

தி.மு.க.–காங்கிரஸ் ரகசியமாக, திரைமறைவாக செய்த வரலாற்று பிழையை மன்னிக்க முடியாத பாவமாக நான் கருதுகிறேன். அவர்கள் செய்த பாவத்திற்காக தமிழக மீனவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். பல தலைமுறைகளாக நமது மீனவர்கள் பயன்படுத்தி வந்த கச்சத்தீவை தாரைவார்த்ததை பாரதீய ஜனதா சமீபத்தில் ஆவணங்களுடன் அம்பலப்படுத்தியது. இது தி.மு.க. காங்கிரஸ் செய்த தேசத்துரோகம்.

தமிழ்நாடு தற்போது போதையை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. குடும்ப அரசியலில் இருப்பவர்கள், போதைப்பொருட்களை ஊக்குவித்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் மிகப்பெரிய சோகத்தை தமிழகம் சந்தித்து வருகிறது.

இந்த போதைப்பொருள் மாபியா யார் பாதுகாப்பில் உள்ளார்கள் என்பது குழந்தைகளுக்கு கூட தெரியும். ஆனால், நரேந்திர மோடி வேடிக்கை பார்க்க மாட்டேன். போதை வணிகத்தை எதிர்த்து போராடுவேன்.

தமிழகத்திற்கான கடைசி தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று உள்ளேன். ஏனெனில் வரும் 19ந் தேதி தமிழகத்திற்கு தேர்தல் நடைபெறுகிறது. இந்த நேரத்தில் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் பாரதீய ஜனதாவும், தேசிய ஜனநாயக கூட்டணியும் எங்கு இருக்கிறது என கேட்கும் இந்தியா கூட்டணிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் மிகப்பெரிய ஆதரவை பாரதீய ஜனதாவுக்கு அளிக்க வேண்டும். அவர்களிடம் ஒன்றுமே இல்லை. பழைய டேப் ரிக்கார்டு உள்ளது. அதில் பாரதீய ஜனதா வந்துவிடும் என்ற பழைய பல்லவியை எதிர்ப்பு பாட்டை மட்டுமே திரும்ப திரும்ப போடுகிறார்கள். உங்களது வளர்ச்சிதான் எனது இலக்கு மற்றும் லட்சியம். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் அனைவரும் எழுந்து நின்று டார்ச்சைட் அடித்து மோடி, மோடி என்று கோஷம் எழுப்பினர். அந்த பகுதி முழுவதும் செல்போன் டார்ச்லைட் ஒளி வீசியது.

# மோடி பிரதமராவதை தடுத்து நிறுத்தி இந்தியா கூட்டணி வெற்று பெறும்

## மோடி கியாரண்டி என்பது எல்லாம் பொய்: புதுவை கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே பேச்சு

புதுச்சேரி, ஏப்.16–

மோடி பிரதமராவதை தடுத்து நிறுத்தி நல்ல எண்ணிக்கையில் இடங்களை இந்தியா கூட்டணி பெறும் என்று புதுவையில் நடந்த காங்கிரஸ் பிரச்சார பொதுக்கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே பேசினார்.

புதுவை தட்டாஞ்சாவடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் புதுவை நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் வைத்திலிங்கம் எம்.பி.யை ஆதரித்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

நாட்டில் பாரதீய ஜனதா ஜனநாயகத்தை படுகொலை செய்து வருகிறது. அமலாக்கத்துறை, சி.பி.ஐ. போன்ற அரசு துறைகளை ஏவி விட்டு எதிர்க்கட்சியினரை மிரட்டி வருகிறார்கள். ஆனால் நாங்கள் நாட்டின் வளர்ச்சி, புதுவை மாநில முன்னேற்றத்துக்கு பாடுபடுகிறோம்.

பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்து புதுச்சேரி விடுபட காங்கிரஸ் போராடியது. புதுவை இந்தியாவுடன் இணைந்த போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் புதுச்சேரிக்கு யூனியன் பிரதேச அந்தஸ்தை வழங்கியது. இப்போது மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. காங்கிரஸ் கட்சி புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்தை வழங்கும். இது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளது. பாரதீய ஜனதாவினர் செய்வோம் என்று சொல்வார்கள். ஆனால் செய்ய மாட்டார்கள். அவர்களது தேர்தல் அறிக்கையில் மாநில அந்தஸ்து தொடர்பாக எதுவும் இல்லை. பிரதமர் மோடி தலைமையிலான அரசை புதுவை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

### 444 எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி உள்ளனர்

நாட்டில் சர்வாதிகாரம் தூக்கி எறியப்பட வேண்டும். பாரதீய ஜனதா கட்சியினர் தேர்தல் முறையில் ஆட்சி அமைக்க முடியாவிட்டால் குறுக்கு வழியில் அதற்கு முயற்சி எடுப்பார்கள். எம்.எல்.ஏ.க்களை மிரட்டி, விலைக்கு வாங்கி ஆட்சிகளை கவிழ்த்து அவர்களது ஆட்சியை அமைப்பார்கள். இதுவரை 444 எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி உள்ளனர். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள்.

புதுவையில் கூட கடந்த காங்கிரஸ் ஆட்சியின் போது முதலமைச்சராக இருந்த நாராயணசாமிக்கு கவர்னர் மூலம் தொல்லை கொடுத்து வந்தனர். இப்போது தமிழகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கவர்னர் மூலம் தொல்லை கொடுத்து வருகிறார்கள். கவர்னர் அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிப்பதில்லை.

காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது ரூ.55 லட்சம் கோடி தான் கடன் இருந்தது ஆனால் இப்போது ரூ.155 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளனர். இதுதான் பொருளாதார முன்னேற்றமா? பா.ஜ.க. ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் சீரழிகிறது.

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் ஒரு ரூ.15 லட்சம் செலுத்துவேன், ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கொடுப்பேன், விவசாய விளைபொருளுக்கு இரண்டு மடங்கு விலையை உயர்த்தி வழங்குவேன், குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தனர். ஆனால் அது எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

### மோடி கியாரண்டி வெறும் பொய்தான்

மோடி கியாரண்டி எல்லாம் வெறும் பொய்தான். அவர் மக்களை முட்டாளாக்க பார்க்கிறார். அவரை தமிழகம், புதுச்சேரி மக்கள் நம்ப மாட்டார்கள்.

இளைஞர்கள், பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் உதவி தொகை வழங்குவதாகவும் ஆட்சிக்கு வந்தவுடன் 30 லட்சம் வேலை வாய்ப்புகளை நிரப்புவதாகவும் காங்கிரஸ் வாக்குறுதி அளித்துள்ளது. நாங்கள் அதை செய்து காட்டுவோம்.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ.யால் வழக்குப்பதிவு செய்யப்படும் நபர்கள் பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்தவுடன் சுத்தமாகி விடுகிறார்கள். அவ்வளவு பெரிய வாஷிங் மெஷின் பாரதீய ஜனதாவிடம் உள்ளது.

பாரதீய ஜனதா கட்சியினர் ஊழலில் திளைக்கிறார்கள். விலைவாசி உயர்வு, வேலை இல்லா திண்டாட்டம் போன்றவற்றுக்கு பிரதமர் மோடி தான் காரணம். உங்களை பாதுகாக்க அடிப்படை உரிமைகளை பாதுகாக்க ஜனநாயகம் காக்கப்பட அனைவரும் 'கை' சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் மல்லிகார்ஜுன கார்க்கே நிருபர்களிடம் கூறியதாவது:

ஜனநாயகம், அரசியலமைப்பு, அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை காக்க மக்களிடம் கோருகிறோம். மோடி தனது அரசை பற்றி பேசாமல் தன்னை பற்றி மட்டுமே முன்னிறுத்துவதால் அவரை விமர்சிக்கிறோம். இது தனிமனித விமர்சனமாக பார்க்கக்கூடாது. பிரசாரத்துக்கு வரும் மோடி தொடர்ந்து காங்கிரசையும் ஆட்சியில் தற்போது இல்லாத காந்தி குடும்பத்தினரை விமர்சிக்கிறார். அது காங்கிரஸ் மீதான பயத்தை வெளிப்படுத்துகிறது. காங்கிரசை அழிக்க முயற்சிக்கிறார். தமிழகம், புதுச்சேரியில் இந்தியா கூட்டணி தி.மு.க. தலைமையில் அனைத்து இடங்களிலும் வெல்லும். கருத்து கணிப்புகள் விஷயத்தில் கருத்து கூற விரும்பவில்லை. பல ஏஜென்சிகள் பலதரப்பட்ட கருத்துகளை தெரிவிக்கின்றனர். நாங்கள் மோடி பிரதமராவதை தடுத்து நிறுத்தி நல்ல எண்ணிக்கையில் இடங்களை இந்தியா கூட்டணி பெறுவோம் என்றார்.

பொதுக்கூட்டத்தில் தமிழக அமைச்சர் பொன்முடி, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை, புதுவை முன்னாள் முதல்அமைச்சர் நாராயணசாமி, காங்கிரஸ் மேலிட பார்வையாளர் அஜோய்குமார், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சிவா எம்.எல்.ஏ, சட்டமன்ற கட்சி தலைவர் வைத்தியநாதன் எம்.எல்.ஏ., காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் தேவதாஸ், ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா மற்றும் எம்.எல்.ஏ.க்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பொதுமக்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க வசதியாக 10,000 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, ஏப்.16

பொதுமக்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க வசதியாக தமிழகம் முழுவதும் 10 ஆயிரத்து 214 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட இருப்பதாக அரசு விரைவு போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2024 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, வருகிற 17 மற்றும் 18ந் தேதிகளில், சென்னையில் இருந்து தினசரி இயக்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பஸ்களுடன், 2 ஆயிரத்து 970 சிறப்பு பஸ்கள் என 2 நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 7 ஆயிரத்து 154 பஸ்களும், பிற ஊர்களில் இருந்து மேற்கண்ட 2 நாட்களுக்கு 3 ஆயிரத்து 60 சிறப்பு பஸ்களும் என மொத்தமாக 10 ஆயிரத்து 214 பஸ்கள் இயக்கப்படுகின்றன.

மேற்படி சிறப்பு இயக்க தினங்களில் வருகிற 18ந் தேதி சென்னையில் இருந்து புறப்பட உள்ள அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்களில் முன்பதிவு பெரும்பான்மையான தடங்களில் முழுமையாக செய்யப்பட்டுள்ளது. தற்போதைய (நேற்றைய) நிலவரப்படி 16ந் தேதிக்கான (இன்று) 30 ஆயிரத்து 630 முன்பதிவு இருக்கைகளில், ஆயிரத்து 22 இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன, 29 ஆயிரத்து 608 இருக்கைகள் காலியாக உள்ளன.

இதே போன்று, 17ந் தேதிக்கான 31 ஆயிரத்து 308 முன்பதிவு இருக்கைகளில் 6 ஆயிரத்து 475 இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

24 ஆயிரத்து 833 இருக்கைகள் காலியாக உள்ளன. எனவே, 18ந் தேதி கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்த்து 16, 17ந் தேதிகளில் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் முடிந்ததும் அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை: உதயநிதி ஸ்டாலின் உறுதி

## ஊட்டியில் ஆ.ராசாவை ஆதரித்து பிரச்சாரம்

ஊட்டி, ஏப்.16–

பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.35 வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், தேர்தல் முடிந்ததும் அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

நீலகிரி தொகுதி தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் ஆ.ராசாவை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஊட்டியில் திறந்தவேனில் இருந்து வாக்கு சேகரித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தளபதியாக மட்டும் அல்ல, எனக்கு அரசியல் வழிகாட்டியாக ஆ.ராசா விளங்குகிறார். பொய்யாக புனையப்பட்ட 2ஜி வழக்கை உச்சநீதிமன்றம் வரை தனி ஆளாக நின்று போராடி, அனைத்து சூழ்ச்சிகளையும் வீழ்த்தினார்.

இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்தால் கியாஸ் சிலிண்டர் ரூ.500–க்கும், பெட்ரோல் ரூ.75க்கும் கொடுக்கப்படும். டீசல் விலை அதிகரிப்பால் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்ந்து வருகிறது. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் டீசல் ரூ.65–க்கும் தரப்படும். நீலகிரியில் பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.35 வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்திற்கு வராத மோடி, நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்ததிலிருந்து தமிழகத்திற்கு அடிக்கடி வருகிறார். தமிழகத்தில் மழை மற்றும் வெள்ளத்தின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீட்பு பணிகளை விரைவுபடுத்தினார். பிரதமர் மோடியோ, அண்ணா தி.மு.க.வினரோ அப்போது வரவில்லை. மத்திய அரசு இழப்பீடு தொகையும் கொடுக்கவில்லை. மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, நெல்லை மாவட்டத்திற்கு தமிழக அரசு சார்பில் ரூ.2 ஆயிரம் கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

தமிழகத்தின் மொழி உரிமை, நிதி உரிமை, கல்வி உரிமை என அனைத்து உரிமைகளும் கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு விட்டது.

ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு இந்தியாவில் வாய்ப்பு இல்லை. பொது சிவில் சட்டத்தை தமிழகத்தில் கொண்டு வர முடியாது.

இதுவரை 22 பேர் நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்துள்ளனர். ஜெயலலிதா தமிழகத்தில் இருந்தவரை நீட் தேர்வு வரவில்லை. அவர் இறந்த பின்னர் தான் நீட் தேர்வு வந்துள்ளது.

இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்தால் தமிழகத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கப்படும். கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தல் வாக்குறுதியில் கூறியது போல் மகளிர் உரிமைத் தொகை திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

நீலகிரியில் மட்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் பேர் இந்த திட்டத்தில் பயன் அடைந்து வருகின்றனர். இதில் ஒரு சில குறைகள் உள்ளது. எனவே தேர்தல் முடிந்த அடுத்த 6 மாதங்களில் தகுதி உள்ள அனைத்து இல்லத்தரசிகளுக்கும் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும்.

மத்திய அரசு நிதியில் மதுரைக்கு எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டு, 2019ம் ஆண்டு பிரதமர் மோடி, எடப்பாடி பழனிசாமி ஆகியோரால் ஒரு செங்கல் மட்டுமே நடப்பட்டுள்ளது. ஆனால் நிதி கொடுக்கவே இல்லை. எனவே அந்த ஒரு செங்கல்லையும் நான் எடுத்து வந்து விட்டேன்.

இதனால் என் மீது வழக்கு தொடுத்தால் கூட பரவாயில்லை. மருத்துவமனை கட்டும் வரை கல்லை தரமாட்டேன். இந்தியாவிற்கு நல்ல பிரதமர் வேண்டும் என்றால் இந்தியா கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது அமைச்சர் ராமச்சந்திரன், தி.மு.க. மாவட்ட செயலாளர் முபாரக், நகராட்சி துணைத் தலைவர் ரவிக்குமார், நகர செயலாளர் ஜார்ஜ் உள்பட பலர் உடன் இருந்தனர். பிரச்சாரத்தின் போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சை கேட்க ஏராளமான கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் கூட்டம் காணப்பட்டது.


**ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

**ஏல அறிவிப்பு**

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 29.04.2024 அன்று மாலை 03:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம். ஏலம் ஆன்லைனில் https://egold.auctiontiger.net-ல் 29.04.2024 அன்று மாலை 03:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை நடத்தப்படும்.

| கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் | தந்தை/ மனைவி பெயர் | முகவரி | கணக்கு துவக்க தேதி | செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 101042517507 | உஸ்மான் R M | த/பெ. மைதீன் அப்துல் காதர் ஜெய்லானி | 68 63, கிழக்கு C I T நகர் 2வது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை தமிழ்நாடு 600035 | 25-08-2023 | 124,977.34 |
| சென்னை | 101042517970 | உஸ்மான் R M | த/பெ. மைதீன் அப்துல் காதர் ஜெய்லானி | 68 63, கிழக்கு C I T நகர் 2வது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை தமிழ்நாடு 600035 | 23-09-2023 | 32,289.57 |
| சென்னை | 101042518216 | உஸ்மான் R M | த/பெ. மைதீன் அப்துல் காதர் ஜெய்லானி | 68 63, கிழக்கு C I T நகர் 2வது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை தமிழ்நாடு 600035 | 06-10-2023 | 141,758.62 |
| சென்னை | 101042519136 | உஸ்மான் R M | த/பெ. மைதீன் அப்துல் காதர் ஜெய்லானி | 68 63, கிழக்கு C I T நகர் 2வது குறுக்குத் தெரு, நந்தனம், சென்னை தமிழ்நாடு 600035 | 30-11-2023 | 25,456.30 |
| சென்னை | 101042519185 | ஜுவஹர் K | த/பெ. கோட்டீஸ்வரன் | 18, அண்ணாசாலை, பெருமாள் முதலி தெரு, அண்ணா சாலை, சென்னை தமிழ்நாடு 600002 | 02-12-2023 | 147,402.84 |
| சென்னை | 101042516575 | A S இப்ராஹிம் | த/பெ அபுல் கலாம் ஆசாத் | வீடு எண் 7 564, 3வது பிரதான சாலை சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை தமிழ்நாடு 600049 | 21-06-2023 | 280,999.32 |
| சென்னை | 101042518164 | V ரமேஷ் | த/பெ. மீரையா | 31 13 ஆறுமுகஆச்சாரி தெரு திருவல்லிக்கேணி, சென்னை தமிழ்நாடு 600005 | 04-10-2023 | 130,669.55 |
| சென்னை | 101042518720 | V ரமேஷ் | த/பெ. மீரையா | 31 13 ஆறுமுகஆச்சாரி தெரு திருவல்லிக்கேணி, சென்னை தமிழ்நாடு 600005 | 04-11-2023 | 84,493.90 |
| சென்னை | 101042518938 | தன்யா E | C/O விஜயன் | வீட்டு எண் 43 முல்லை தெரு, பிஎச், ஆர்த்தி நகர் அரியாங்குப்பம் கொம்யூன் கடலூர் தமிழ்நாடு 605007 | 18-11-2023 | 86084.9849 |
| சென்னை | 101042519127 | அலெக்ஸ் G D | த/பெ தேவ சகாயம் | வீடு எண் 11 ஏ1 பிளாக் கபாலி கார்டன் லைலாப்பூர் சென்னை தமிழ்நாடு 600004 | 29-11-2023 | 206672.97 |
| சென்னை | 101042519134 | K S குமார் | த/பெ கமலகண்ணையா | 375 E, கொருக்குப்பேட்டை ஜெ ஜெ நகர் வண்ணாரப்பேட்டை சென்னை தமிழ்நாடு 600021 | 29-11-2023 | 180771.394 |
| சென்னை | 101042519182 | ராஜலட்சுமி S | C/O மோகனசுந்தரம் | C 472 17 2வது தளம் 9வது தெரு பெரியார் நகர் ஜவஹர் நகர் சென்னை தமிழ்நாடு 600082 | 02-12-2023 | 206881.19 |
| சென்னை | 101042519353 | ராஜலட்சுமி S | C/O மோகனசுந்தரம் | C 472 17 2வது தளம் 9வது தெரு பெரியார் நகர் ஜவஹர் நகர் சென்னை தமிழ்நாடு 600082 | 12-12-2023 | 56374.1947 |
| சென்னை | 101042519184 | சந்தோஷ் E R | C/O ஈக்காடு ரவிசுந்தர் | C 472 17 2வது தளம் 9வது தெரு பெரியார் நகர் ஜவஹர் நகர் சென்னை தமிழ்நாடு 600082 | 02-12-2023 | 135227.03 |
| சென்னை | 101042519342 | சந்தோஷ் E R | C/O ஈக்காடு ரவிசுந்தர் | C 472 17 2வது தளம் 9வது தெரு பெரியார் நகர் ஜவஹர் நகர் சென்னை தமிழ்நாடு 600082 | 11-12-2023 | 79566.7445 |
| சென்னை | 101042519269 | பாபு C V | த/பெ வெங்கட்ராமன் | வீட்டு எண் 26 15 குறவன் குளம் 2வது சந்து, சூளை சென்னை தமிழ்நாடு 600112 | 07-12-2023 | 209552.75 |
| சென்னை | 101042519357 | பாபு C V | த/பெ வெங்கட்ராமன் | வீட்டு எண் 26 15 குறவன் குளம் 2வது சந்து, சூளை சென்னை தமிழ்நாடு 600112 | 12-12-2023 | 315416.8346 |
| சென்னை | 101042519339 | A M குமாரி | C/O ராஜலட்சுமி S | S 451, முதல் தளம், 22வது தெரு, கே எம் காலனி, ஜவஹர் நகர், சென்னை தமிழ்நாடு 600082 | 11-12-2023 | 214464.55 |
| சென்னை | 101042519340 | M K சங்கர் | த/பெ மணிமூர்த்தி | எச் எண் 11 0 எண் 208 அண்ணா தெரு, 14வது தெரு, ஜிகேஎம் காலனி ஜவஹர் நகர் சென்னை தமிழ்நாடு 600082 | 11-12-2023 | 203098.9409 |
| சென்னை | 101042519352 | உதயகுமார் | த/பெ கல்யாணசுந்தரம் | A 33 பிளாட் E 15வது குறுக்குத் தெரு பெரியார் நகர், ஜவஹர் நகர், சென்னை தமிழ்நாடு 600082 | 12-12-2023 | 177910.96 |
| சென்னை | 101042519359 | ஸ்ரவந்தி | C/O பாபு | 26 குறவன் குளம் 2வது சந்து, சூளை சென்னை தமிழ்நாடு 600112 | 12-12-2023 | 209313.3123 |

**ஏல தேதி 29.04.2024 அன்று மாலை 03.00 மணி**

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**